# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


| வெளியிடுபவர் | தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.03.19 |

## இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழான உயர்ந்தபட்ச இழப்பீட்டுக் கொடுப்பனவு அதிகரிப்பு

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகையை ரூ.600,000/- இருந்து ரூ.1,100,000/- இற்கு ரூ.500,000/- ஆல் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு, அத்தகைய நிறுவனங்களின் உரிமங்களை இரத்து செய்யும் அல்லது இடை நிறுத்தும் சந்தர்ப்பத்தில் மேலதிக நிவாரணத்தை வழங்குவதற்காக இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி, நாணயச்சபையால் உரிமங்கள் இரத்து செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்திவைக்கப்பட்ட சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி (சி.ஐ.எவ்.எல்), த ஸ்ராண்டெட் கிறெடிற் பினான்ஸ் லிமிடெட் (ரி.எஸ்.சி.எவ்.எல்), ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிடெட் (ரி.கே.எஸ்.எவ்.எல்), த பினான்ஸ் கம்பனி பிஎல்சி (ரி.எவ்.சி), ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட் (ஈ.ரி.ஐ.எவ்.எல்) மற்றும் ஸ்வர்ணமஹால் பினான்சியல் சேர்வீசஸ் பிஎல்சி (எஸ்.எவ்.எஸ்.பி) ஆகிய ஆறு (6) நிதி நிறுவனங்களின் வைப்பாளர்கள் திருத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையைப் பெறத் தகுதியுடையவர்கள்.

எந்த இழப்பீட்டுத் கொடுப்பனவையும் இதுவரை பெற்றிருக்காத மேற்கூறிய கம்பனிகளின் வைப்பாளர்கள் கூட திருத்தப்பட்ட உயர்ந்தபட்ச தொகையான ரூ.1,100,000.00 கீழ் இழப்பீட்டுக்காக விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

தற்போது, இலங்கை மத்தியவங்கியின் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் மேலதிக இழப்பீட்டுக் கொடுப்பனவை விரைவாக ஆரம்பிப்பதற்கு அத்தியாவசியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதிகரிக்கப்பட்ட இழப்பீட்டு வரம்பின் கீழ் இழப்பீடு செலுத்தும் பொறிமுறை மற்றும் கொடுப்பனவின் ஆரம்பத் திகதி ஆகியவை இலங்கை மத்திய வங்கியால் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

**28.02.2021 இல் உள்ளவாறாக, இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் சுருக்கம்**

| கம்பனியின் பெயர் | காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | ரூ.600,000 இல் செலுத்த வேண்டிய இழப்பீடு (ரூ.மில்லியன்) | செலுத்தப்பட்ட இழப்பீட்டு மொத்தத் தொகை (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|
| சி.ஐ.எவ்.எல் | 18,968 | 1,785.36 | 1,402.97 |
| ரி.எஸ்.சி.எவ்.எல் | 6,616 | 1,229.66 | 998.33 |
| ரி.கே.எஸ்.எவ்.எல் | 35,312 | 853.46 | 684.86 |
| ரி.எவ்.சி | 146,533 | 10,727.60 | 8,514.38 |
| எஸ்.எவ்.எஸ்.பி | 9,661 | 983.19 | 865.41 |
| ஈ.ரி.ஐ.எவ்.எல் | 37,394 | 10,220.76 | 9,149.29 |
| **மொத்தம்** | **254,484** | **25,800.02** | **21,615.24** |

உயர்ந்தபட்ச இழப்பீட்டுக் கொடுப்பனவின் அதிகரிப்பு, ஆறு கம்பனிகளினதும் வைப்பாளர்கள் தொடர்பில் ரூ.9.8 பில்லியன் கொண்ட மேலதிகக் கொடுப்பனவை ஏற்படுத்துகின்ற அதேவேளையில் முழுமையாக இழப்பீட்டினைப் பெற்ற வைப்பாளர்களின் சதவீதம் 94.0 இற்கு அதிகரிக்கும்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்திலிருந்து 0112477261/ 0112398788 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.